DEPOSITION OF WITNESS IN THE COURT OF
II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, RANIPET.

SC No.:239/2009

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw6 |
| Name | : | ஜனார்த்தனம் |
| Father's / Husband's Name | : | இராஜகோபால் |
| Age | : | 51 |
| Religion | : | இந்து |
| Calling | : | -- |
| Caste | : | வன்னியகுல சுத்திரியர் |
| Village | : | பாலுச்செட்டி சததிரம் |
| Date | : | 30.07.2018 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

மு.வி.

நான் தற்போது சென்னையில் துணை பதிவுத்துறை தலைவராக பணி செய்கிறேன். நான் 1997 ஆம் ஆண்டிலிருந்து 2000 வரை வாலாஜா சார் பதிவாளர் அலுவலகத்தில் சார் பதிவாளராக பணியாற்றி வந்தேன். இவ்வழக்கில் சம்மந்பதப்பட்ட ஆவணம் 360/99 நான் 1999 ஆம் ஆண்டு நவம்பர் 18 ஆம் தேதி தற்செயல் விடுப்பில் இருந்தபோது இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணம் 360/99 திரு.அப்துல் சர்தார் தலைமை எழுத்தர் அவர்களால் முடிவுறா ஆவணமாக பதிவுசெய்யப்பட்டது. இவ்வலுவலகத்திற்கு டிசம்பர் மாதம் அதே ஆண்டு பதிவுத்துறை சிறப்பு விஜிலன்ஸ் ஆய்வாளர் திரு. அப்துல் காதர் அவர்கள் மேற்படி ஆவணத்தில் உள்ள ரூபாய் 5000 உள்ள இரண்டு (என்ஜேஎஸ்) முத்திரை தாள்கள் போலியானவை என்று வழக்கு தொடர்ந்தார். அந்த ஆவணமானது சீனிவாசன் என்பவரால் அன்பழகனுக்கு எழுதப்பட்ட கிரைய ஆவணமாகும். இது சம்மந்தமாக போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

வாலாஜாப்பேட்டை சார் பதிவாளர் அலுவலகத்தில் நான் மூன்று ஆண்டுகளாக பணி செய்தேன். சார் பதிவாளராக என்ற முறையில் முத்திரைத் தாள் விற்பனைகள் மற்றும் பத்திரம் எழுத்தர்கள் யாரெல்லாம் பத்திரம் விற்பனை செய்கிறார்கள் என்பது எனக்கு தெரியும். முத்திரை தாள் விற்பனையாளர்கள் வாரத்திற்கு ஒரு முறை

முத்திரைத்தாள் விற்பனை குறிப்பு எங்களிடம் சமர்பிப்பார்கள் என்றால் சரிதான். எங்கள் எல்லைக்கு உட்பட் பத்திர விற்பனையார்கள் மட்டுமல்லாமல் வெளியில் விற்பனை செய்த பத்திரங்களையும் (அந்த காலக்கட்டத்தில்) சமர்ப்பித்தால் நாங்கள் பதிவு செய்வோம். நான் பணியிலிருந்து விடுப்பு எடுக்கும்போது தலைமை எழுத்தர்தான் பொறுப்பு என்பது அலுவலகத்தில் எழுதப்படாத வழக்கம் அல்லு முறை. சம்மந்தப்பட்ட ஆவணம் சாட்சியிடம் காண்பிக்கப்பட்டு அந்த ஆவணம் சுந்திர மூர்த்தி என்பவர் பத்திரத்தை எழுதியுள்ளார். கோட்டீஸ்வரன் கணினியில் தட்டச்சு செய்துள்ளார். நான் விடுப்பில் சென்றால் அங்கு எங்கள் அலுவலகத்தில் உள்ள அவலுவலர்களிடம் பத்திர பதிவு சம்மந்தப்பட்ட எழுத்தர் மற்றும் பத்திர விற்பனையாளர்களுக்கு தெரியும் என்று சொன்னால் சரிதான். நீங்கள் விடுப்பில் செல்வதை தெரிந்து கொண்டுதான் பத்திரம் பதிவுசெய்தார்கள் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஆவணம் பதிவு செய்து ஒன்னேகால் மாதத்திற்கு பிறகுதான் சிறப்பு புலனாய்வு பிரிவிலிருந்து ஆய்வு செய்தார்கள் என்றால் சரிதான். அனைத்து சார் பதிவாளர் அலுவலகத்திலும் போலி பத்திரங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என்பதன் அடிப்படையில்தான் ஒவ்வொரு அலுவலகத்திலும் ஆய்வு செய்யப்பட்டது. எதற்காக பதிவுறா பத்திரமாக நிறுத்திவைக்கப்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. கோட்டீஸ்வரனும் சுந்திரமூர்த்தியும் பதிவுசெய்தார்கள் என்றும் இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் சம்மந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல.

# DEPOSITION OF WITNESS IN THE COURT OF
# II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, RANIPET.

SC No.:239/2009

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw7 |
| Name | : | குமார் எஸ்.எஸ். |
| Father's / Husband's Name | : | சிவசங்கர முதலியார் சி.எஸ் |
| Age | : | 65 |
| Religion | : | இந்து |
| Calling | : | வளையல் கடை |
| Caste | : | முதலியார் |
| Village | : | ஸ்ரீபெரம்பத்தூர் |
| Date | : | 30.07.2018 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

மு.வி.

நான் ஸ்ரீபெரம்பத்தூர் பேரூராட்சி கட்டிடத்தில் நான் வளையல் கடை வைத்துள்ளேன். முத்திரைத்தாள் அந்த கடையில் வைத்து விற்பனை செய்து வருகிறேன். நான் 1985 ஆம் ஆண்டு முதல் பத்திர விற்பனையாளராக பதியப்பெற்று விற்பனை செய்து வருகிறேன். 1999 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் தேதி ஞாபகம் இல்லை ஒரு நாள் பத்திர பதிவுத் துணை தலைவர் என்னுடைய பத்திர விற்பனை பதிவேட்டை ஆய்வு செய்தார். ரூபாய் 5000 மதிப்புள்ள பத்திரம் விற்பனை செய்யப்பட்டுள்ளதா என்பதை பார்வையிட்டார். அவர் குறிப்பிட்ட தேதியில் ரூபாய் 5000 மதிப்புள்ள பத்திர தாள் நான் விற்பனை செய்யவும் இல்லை அன்றைய தினம் என்னிடம் இருப்பும் இல்லை. பிறகு சி.பி.சி.ஐ.டி சேர்ந்த ஆய்வாளர் என்னை விசாரித்து இருப்பு கையேடு, விற்பனை கையேடு மற்றும் முத்திரையை என்னிடமிருந்து சாட்சிகளின் முன்னிலையில் கைப்பற்றினார்கள். எஸ்.எஸ். குமார் என்னும் பெயர் கொண்ட முத்திரை அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகின்றது.

கு.வி.

ஸ்ரீபெரம்பத்தூர் சப் ட்ரெஷரியிலிருந்து பத்திரங்களை வாங்கிக் கொண்டுவந்து விற்பனை செய்வேன். என்னிடம் கையிருப்பிலிருக்கும் பத்திரம் மற்றும் நான் வாங்கிக் கொண்டுவரும் பத்திரம் ஆகியவற்றை அந்த பத்திர பதிவேட்டில் குறிப்பிட்டு வைத்திருப்பேன். நான் எத்தனை பத்திரங்களை விற்றேன் என்றும் மீதம் எவ்வளவு

உள்ளது என்பதும் அந்த பதிவேட்டில் குறிப்பிட்டிருப்பேன். பத்திர பதிவு துணை தலைவர் முருகேசன் என்பவர் என்னை விசாரித்தார். எஸ்.எஸ். குமார் என்ற முத்திரையைத்தான் நான் நிரந்தரமாக பயன்படுத்துகிறேன். சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில்தான் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். உங்களிடமிருந்து முத்திரைகள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றும் போலிஸார் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS IN THE COURT OF
II ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, RANIPET.

SC No.:239/2009

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw8 |
| Name | : | பாலசந்தர் |
| Father's / Husband's Name | : | நா. பார்த்தசாரதி |
| Age | : | 50 |
| Religion | : | இந்து |
| Calling | : | -- |
| Caste | : | முதலியார் |
| Village | : | காஞ்சிபுரம் |
| Date | : | 30.07.2018 |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

மு.வி.

நான் தற்போது காஞ்சிபுரத்தில் சுயதொழில் செய்து வருகிறேன். இந்த வழக்கு நடக்கும்போது ஸ்ரீபெரம்பத்தூரில் இருந்தேன். 1999 ஆம் ஆண்டு எஸ்.எஸ். குமார் என்பவர் பெயரில் போலி முத்திரை தாள் விற்பனை செய்யப்பட்டதாக போலிஸார் அவரை விசாரணைக்காக அழைத்து சென்றார்கள். நான் என்ன விவரம் என்று போலிஸாரிடம் கேட்டேன். சி.பி.சி.ஐ.டி வேலூர் அலுவலகத்திற்கு வந்து விவரத்தை அறிந்து கொள்ளுமாறு கூறினார்கள். எஸ்.எஸ்.குமார் என்பவருடைய முத்திரை தாள் விற்பனை செய்யும் பத்திர பதிவேடு மற்றும் முத்திரை ஆகியவற்றை அடையாளம் காட்டி கைப்பற்றியதற்காக சாட்சி கையெழுத்துப் போட சொன்னார்கள். கைப்பற்றுதல் மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது. அது அ.சா.ஆ. 8 ஆக குறியீடு செய்யப்படுகின்றது. போலிஸார் என்னை விசாரித்தார்கள்.

கு.வி.

ஸ்ரீபெரம்பத்தூரில் லாரி புக்கிங் ஆபிஸில் நான் வேலை செய்து வருகிறேன். வளையல் கடை எங்கள் அலுவலகத்திற்கு பக்கத்தில் தான் உள்ளது. அவர் எங்கள் உறவினர் மற்றும் குடும்ப நண்பர். எஸ். எஸ். குமார் எங்கள் அலுவலகத்தில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது எங்களை விசாரித்தார்கள். எஸ்.எஸ்.குமார் அவர்களை சி.பி.சி.ஐ.டி போலிஸார் வேலூருக்கு அழைத்து சென்றார்கள். நான் மறுநாள் வேலூருக்கு சென்று பார்த்தேன். சி.பி.சி.ஐ.டி அலுவலகத்தில் என்னிடம்

கையெழுத்து வாங்கினார்கள் என்றால் சரிதான். நீங்கள் கையெழுத்துப்போடும் போது வெத்து காகிதமாக இருந்ததா அல்லது எழுதப்பட்டிருந்ததா என்றால் எழுதப்பட்டிருந்தது. அவர்கள் கைப்பற்றியதற்காக கையெழுத்து வாங்கினார்கள். நான் படித்துப் பார்த்து கையெழுத்துப்போட்டேன். அந்த கையெழுத்து அ.சா.ஆ. 8 ஆகும்.